**செ.வெ.எண்.79** **நாள்.23.05.2022**

**சென்னை மாவட்டம்**
**செய்தி வெளியீடு**

**மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம்**

இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் கல்வி விடுதிகளில் காலியாக உள்ள பகுதிநேர தூய்மைப்பணியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு

| வ.எண் | பதவி | காலிப்பணியிடம் | தொகுப்பூதியம் | இனச்சுழற்சி (பணியிட எண்ணிக்கை பூர்த்தி செய்யப்பட வெண்டும்) | |
|---|---|---|---|---|---|
| | | | | Priority | Non-Priority |
| 1 | பகுதி நேர தூய்மைப் பணியாளர் (தொகுப்பூதியம்) | 12 | ரூ.3000 Per Month | GT- --<br>SCA- --<br>MBC/DNC- --<br>BC-1<br>SC/ST-2 | GT-4<br>MBC/DNC-2<br>BC-3 |

மேற்கண்ட பகுதிநேர தூய்மைப்பணியாளர் (ஆண்/பெண்) காலிப்பணியிடங்கள் நேர்காணல் மூலம், இனச்சுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. இதற்காக பின்வரும் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1.தமிழில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

2.வயது வரம்பு: 01.07.2022 தேதியில் SC/ST 18 முதல் 37, BC, BCM, MBC & DNC 18 முதல் 34, இதர பிரிவினர் 18 முதல் 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு விதிமுறைகளில் அனுமதிக்கப்பட்டவாறு வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும்.

மேற்படி தகுதிகளுடன் சென்னை மாவட்டத்திலுள்ள விடுதிகளில் பகுதிநேர தூய்மைப்பணியாளர் (தொகுப்பூதியம்) பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் கீழ் உள்ள மாதிரி விண்ணப்ப படிவம் போன்று தயார் செய்து அதனை பூர்த்தி செய்தும், உரிய சான்றுகளின் நகல் இணைத்தும், சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி 30.05.2022 தேதிக்குள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், 2-வது தளம், தொலைபேசி எண்: 044–25241002 என்ற முகவரியில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், காலதாமதமாக விண்ணப்பங்கள் மற்றும் முகவரி தவறாக இருந்து அழைப்பாணை திரும்ப பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவற்றின்மீது அரசு பரிசீலிக்காது எனவும் மனுதாரரே முழுப்பொறுப்பு எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மனுதாரர்களை மேற்கண்ட தகுதியின் அடிப்படையில் விண்ணப்பம் செய்யும்மாறு சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.விஜயா ராணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை-1.**